**எஸ்.டி.சி .எண்.3498/2023 நாள்– 27.10.2025 பக்கம் 301/2020**

**ம.சா .1 ஜூல்பிகர் அலி த/பெ.அபுபக்கர்**

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**C.M.P 858/2024 கடந்த 25.04.2024 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி கடந்த 14.08.2025 மற்றும் 04.09.2025 ஆகிய தேதிகளில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு சாட்சி மீண்டும் இன்றைய தினம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி –**

**1) தமிழ்நாடு மெர்கென்டைல் வங்கியில் என்னுடைய ஏற்றுமதி நிறுவனத்தில் கொள்முதல் இருப்பினை பொறுப்பிற்காக காட்டி ரூ.3.50 கோடி கடன் பெற்று அந்த கடனை திருப்பி செலுத்தாமல் அதற்காக சரக்குகளையும் நான் காட்டாமல் மோசடி செய்ததாக என் மீது மேற்படி வங்கியின் சார்பில் கரூர் மாவட்ட குற்றபிரிவு காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் குற்ற இறுதி அறிக்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அது சிசி எண். 15/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கு எதிராக பல்வேறு காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றால் சரிதான்.**

**ம.சா. 1 ஆன புகார்தாரர் தன்னை குறுக்குவிசாரணை செய்யும் போது தனக்கு உடல் நிலை சரியில்லை என கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி மீண்டும் ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்**
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்